## சைதன்யபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம்!

கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது சைதன்யபுரம். கிழக்கே ஸ்ரீ வாஞ்சியம், மேற்கே நாச்சியார்கோவில், தெற்கே திருக்கண்ணமங்கை, வடக்கே திருவீழிமிழலை - இவற்றிற்கு நடுவே விளங்குவது சைதன்யபுரம். இங்குள்ள புராதன திருக்கோயில் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் பக்தர்களின் ஆதரவுடன் திருப்பணிகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன.

இத்திருக்கோயிலின் மகா சம்ப்ரோட்சணம் வரும் 29.10.2012 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் நடைபெறுகிறது. இந்த விழாவில் கலந்துகொண்டு இறையருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

மேலும் விவரங்களுக்குக் கீழ்க்கண்டவர்களுடன் தொடர்புகொள்ளலாம்.

**திரு. ராமபிரசாத் - 9003034098,**
**திரு. கே.எஸ். வெங்கடரமணன் - 9952904445.**

# பெண்ணின் பிடிவாத குணம் மாற..!

திரு..................
கும்பகோணம்.

**கேள்வி: எனது நண்பரின் பெண் ஜாதகத்தை அனுப்பியிருக்கிறேன். மிகுந்த தெய்வ பக்தியும், நம்பிக்கையும் கொண்ட குடும்பம். இப்பெண்ணிற்குத் தற்போது வயது 20. சமீபகாலமாக, இப்பெண்ணின் நடவடிக்கைகள் சரியாக இல்லை.**

**தெய்வீக பத்திரிகையான 'குமுதம் ஜோதிடம்' இதழையும், மந்திர ராஜபத ஸ்தோத்திரத்தையும் இப்பெண்ணிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளேன். பெண்ணின் இந்நிலையைச் சரிசெய்ய பரிகாரம் கூறினால், ஒரு நல்ல குடும்பத்தை வாழ வைத்த புண்ணியம் தங்களுக்குச் சேரும்.**

**பதில்:** தங்கள் கடிதத்தைப் படித்து நாங்கள் படும் வேதனைக்கு அளவில்லை. பெண்ணின் ஜாதகத்தில் பூர்வ புண்ணியம், சப்தமம், அஷ்டமம் ஸ்தானங்களுக்குச் சற்று கடினமான தோஷங்கள் இருப்பதைப் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம். லக்கினத்தில் ராகு சந்திரன் சேர்க்கை - பெண்ணின் பிடிவாதக் குணத்தைக் காட்டுகிறது. வாக்கு ஸ்தானத்தில் அதிக பலம் பெற்றுள்ள சனிபகவான் அமர்ந்திருக்கிறார்.

கும்பகோணம் ஸ்ரீ சக்ரபாணி திருக்கோயிலில் 48 செவ்வாய்க்கிழமைகளில் தீபத்தில் நெய்யும், 48 சனிக்கிழமைகள் தீபத்தில் நல்லெண்ணெயும் தவறாது சேர்த்து வந்தால் இந்த தோஷம் நீங்கி, பெண்ணின் மனதில் தெளிவு பிறக்கும். இது தவிர சுந்தர காண்டம் ஒரு சர்க்கம் தினமும் படித்து வரும்படி பெண்ணின் தாயிடம் சொல்லுங்கள். இவை மிகவும் சக்தி வாய்ந்த பரிகாரங்களாகும். நம்பிக்கையுடன் செய்து வாருங்கள்.



ஸ்ரீ நடராஜர் — சிதம்பரம்.